



# சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

## சுற்றுலா

மானியக் கோரிக்கை எண். 29

## அறிவிப்புகள்

2018–2019

# சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# சுற்றுலா

## மானியக் கோரிக்கை எண். 29

# அறிவிப்புகள்
# 2018–2019

வெல்லமண்டி ந. நடராஜன்
சுற்றுலாத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2018

## 1. பள்ளி மாணாக்கர்களுக்கு சுற்றுலாவைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாவட்ட அளவிலான உள்ளூர் சுற்றுலாவை ஏற்பாடு செய்தல்

சுற்றுலாவைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சென்ற ஆண்டு பள்ளி மாணாக்கர்களுக்கு நடத்தப்பட்ட சுற்றுலா அவர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளதால், இந்த ஆண்டும் பள்ளி மாணாக்கர்களுக்கு ஒரு நாள் சுற்றுலா சென்று வருவதற்கு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** சுற்றுலாத்துறை மூலம் மாவட்டம் ஒன்றிற்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் **32** மாவட்டங்களுக்கு மொத்தம் **64** இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

## 2. 2018 ஆம் ஆண்டு உலக சுற்றுலா தின விழாவினை மதுரையில் (மாநில அளவில்) கொண்டாடுதல்

தமிழக கலை, பண்பாடு மற்றும் கலாச்சாரத்தினை கண்டுகளிக்க வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக பல்வேறு விழாக்கள் சுற்றுலாத் துறையின் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. உலக சுற்றுலா அமைப்பு அறிவித்துள்ளவாறு செப்டம்பர் 27 ஆம் நாள், உலக சுற்றுலா தினமாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டு உலக சுற்றுலா தின விழா, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** மாநில அளவில் மதுரையில் கொண்டாட 25 இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும்.

## 3. நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள பூம்புகார் சுற்றுலா வளாகத்தை பழுதுபார்த்து புதுப்பித்தல்

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள பூம்புகார் சுற்றுலா வளாகம், பண்டைய காலத்தில் சோழர்களின் துறைமுகத் தலைநகரமாக விளங்கியது. சுற்றுலாத்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள இந்த சுற்றுலா வளாகத்தில் அமைந்துள்ள சிலப்பதிகார கலைக்கூடம், மகர தோரண வாயில், அழகிய சிற்பங்களையும் பூங்காவையும் கொண்டுள்ள பாவை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், கொற்றப்பந்தல் முதலிய கலைமிகு படைப்புகள் கொண்ட நினைவுச் சின்னங்கள், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2** கோடியே **65** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழுதுபார்த்து புதுப்பிக்கப்படும்.

## 4. தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள கட்டபொம்மன் நினைவுக் கோட்டையை பழுதுபார்த்து புதுப்பித்தல்

இந்தியாவில், ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்து முதல் வீரமுழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் அரசாண்ட பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் நினைவுக் கோட்டை கட்டப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறையின் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் இந்த நினைவுக் கோட்டை வளாகம், மாண்புமிகு இதயதெய்வம் **புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழுதுபார்த்து புதுப்பிக்கப்படும்.

## 5. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல் தமிழ்நாடு விடுதிகளில் கூடுதல் வசதிகள் செய்தல்

தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் வசதியாக தங்கிச் செல்ல முக்கிய சுற்றுலாத் தலங்களில் அனைத்து வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில், கிருஷ்ணகிரி, ஓசூர், ஒகேனக்கல், ஊட்டி, மதுரை–2, திருச்செந்தூர் மற்றும் கொடைக்கானல் ஆகிய தலங்களில் செயல்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு விடுதிகளில், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1** கோடியே **41** இலட்சத்து **50** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வசதிகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் செய்து தரப்படும்.

## 6. சேலம் மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஏற்காடு படகு இல்லத்தில் கூடுதல் வசதிகள் செய்தல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் ஒன்பது படகு இல்லங்கள் இயங்கி வருகின்றன. சேலம் மாவட்டத்திலுள்ள ஏற்காடு படகு இல்லத்தில் சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பு மற்றும் நலன் கருதி, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, படகு குழாம் 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

## 7. நீலகிரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பைக்காரா படகு இல்லத்தில் கூடுதல் வசதிகள் செய்தல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் ஒன்பது படகு இல்லங்கள் இயங்கி வருகின்றன. நீலகிரி மாவட்டத்திலுள்ள பைக்காரா படகு இல்லத்தில் சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பு மற்றும் நலன் கருதி, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** படகு குழாமிலிருந்து படகு இல்லம் வரை கைப்பிடியுடன் கூடிய புதிய படிக்கட்டுகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் **37 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் செய்யப்படும்.**

**வெல்லமண்டி ந. நடராஜன்**
சுற்றுலாத்துறை அமைச்சர்